"தமிழ் எங்கள் உயிருக்கு நேர்"

# தமிழ்க் கல்விச்சேவை சுவிற்சர்லாந்து

# பொதுத்தேர்வு 2019

## தமிழ்மொழி ஆண்டு 10

## புலன்மொழித்தேர்வு

**கேட்டலும் விளங்கிக்கொள்ளுதலும்**

**சுட்டெண் :** ____________________

## அ - பகுதி

**ஒலியிறுவெட்டில் ஒலிக்கப்பெறும் உரைப்பகுதியைக் கேட்டு, விளங்கிக்கொண்டு, கீழ்க்காணும் கூற்றுகள் சரியாயின் ✓ எனவும், பிழையாயின் × எனவும் பெட்டியினுள் அடையாளமிடுக.**

1. பல இலக்கிய வடிவங்களைக் கொண்டதாகத் தமிழிலக்கியப்பரப்பு விளங்குகிறது. ☐
2. மக்கள் வாழ்வாங்கு வாழ்வதற்கான நெறிகளைத் தமிழிலக்கியங்கள் வகுத்துக் காட்டுகின்றன. ☐
3. தமிழிலுள்ள சித்தர் பாடல்கள் தனித்துவம் மிக்கவை. ☐
4. சித்தர்கள், பாடல்கள் ஊடாக வாழ்க்கை நிலையாமையைப் புலப்படுத்தியுள்ளார்கள். ☐
5. பாடல் அடிகளைக் கொண்டு பெரும்பாலான சித்தர் பெயர்கள் அழைக்கப்பெறுகின்றன. ☐
6. சித்தர் பாடல்கள் ஒன்றுக்கு மேற்பட்ட கருத்துகளைப் புலப்படுத்துவதில்லை. ☐
7. சித்தர் பாடல்களுக்கு உரை எழுதுவது எளிதானதாகும். ☐
8. “கொல்லன் உலை போலக் கொதிக்குதடி…..” என்ற பாடலை அழுகணிச் சித்தர் பாடினார். ☐

**(8×½ =4புள்ளிகள்)**

## ஆ - பகுதி

**ஒலியிறுவெட்டில் ஒலிக்கப்பெறும் நேர்காணற்பகுதியைக் கேட்டு, விளங்கிக்கொண்டு கீழ்க்காணும் வினாக்களுக்கு விடை எழுதுக.**

1. யோகர் சுவாமிகளின் பெற்றோர் பெயர் என்ன?

______________________________

2. யோகர் சுவாமிகள் தனது இளமைக்காலத்தில் செய்த தொழில் என்ன?

______________________________

3. யோகர் சுவாமிகள் தன்னுடன் பணிபுரிந்தவர்களுக்குக் கூறிய உபதேசங்களுள் ஒன்றினைத் தருக.

______________________________

4. யோகர் சுவாமிகளின் குருவின் பெயர் என்ன?

______________________________

5. யோகர் சுவாமிகளின் உபதேசங்களைப் பரப்புவதற்காக வெளியிடப்பெற்ற மாத இதழ் எது?

______________________________

6. யோகர் சுவாமிகளின் சீடர்களுள் ஒருவரின் பெயரினைத் தருக.

______________________________

**(6×1=6புள்ளிகள்)**